# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No.53/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பி.வா.சா | : | 5 | நாள் | : | 16.06.2026 |
| பெயர் | : | பொன்னுதுரை | தொழில் | : | |
| தந்தை பெயர்/ கணவர் பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16th day of June 2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 92ம் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். என் தந்தை பெயர் வேலுச்சாமி தேவர். என் தாத்தா பெயர் சண்முகவேல் தேவர். நாங்கள் ஊத்துமலையை பூர்விகமாக கொண்டவர்கள். 92ம் பிரதிவாதி கருப்பாயி அம்மாள் குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் நல்ல அறிமுகம் உண்டு. அதனால் சுக துக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள் ஆவணங்கள் எழுதும்போதும் உடனிருப்பார்கள். என் தந்தை கையொப்ப விவரம் எனக்கு தெரியும். அவர் எங்கள் வீட்டில் வரவு செலவு நோட்டில் எழுதுவார் அதனால் அவரது கையொப்பம் தெரியும். பி.சா.ஆ.10 ஆவணம் 15.08.1942 தேதியிட்ட உயில் ஆவணத்தில் காணப்படும் கையொப்பம் என் தந்தையுடையதாகும்.

**குறுக்கு விசாரணை : இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.06.16 18:40:46 +0530